லோயல் மாதிரி வினாத்தாள்கள்
புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

சுட்டெண் : ..... **மாதிரி 01** நேரம் : 45 நிமிடம்

ஆசிரியர் : அ. சுரேஸ்

N.Dip in Teach, BA, PGDE, MA (Sociology),
Dip in Announcing and Presenting (A Grade), MED.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

வினாத்தாள் I

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

★ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

★ **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

★ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.

★ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

★ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



ICT

Maths **English**

Tamil **History**

Science




தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன


Contact

76667-4945

- **1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

1.






(1)





(2)




(3)

2.






(1)




(2)




(3)

3. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஒர் உரு ஏனைய இரு உருக்களில் இருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.


(1)




(2)




(3)




4. கூட்டினுள் தரப்பட்ட வடிவங்களை அவதானியுங்கள். அங்கு உள்ள எல்லா வடிவங்களையும் கொண்ட தொகுதி.






(1)



(2)



(3)

- **5, 6 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றிலே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது யாது?**

5. மாம்பழம், சர்க்கரைச்சாதம், வாழைப்பழம், பாற்சோறு, பலாப்பழம், விளாம்பழம்

(1) பலாப்பழம் (2) விளாம்பழம் (3) பாற்சோறு

6. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை, களுத்துறை, அம்பாறை

(1) யாழ்ப்பாணம் (2) அம்பாறை (3) களுத்துறை

www.lkedp.lk

சுட்டெண் : .....

• **7, 8 ஆகிய வினாக்களில்** ○ + ○ = 22 **எனவும்,** □ - 3 = ○ **எனவும்** □ + ○ = ▭ **எனவும் தரப்பட்டுள்ளது.**

7. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 10 (2) 12 (3) 14

8. ○ + □ + ▭ இதற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 50 (2) 52 (3) 55

9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் **சரியாக** எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

(2) அவர்கள் பிரச்சினைகளை எதிரு நோக்கினர்.

(3) அவர்கள் பிரச்சனைகளை எதிர்நோக்கினர்.

10. "உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவோம்" என்ற கருத்தைத் தரும் பழமொழி

(1) கிட்டாதாயின் வெட்டென மற.

(2) பொறுத்தார் பூமியாள்வார்.

(3) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

• **11 ஆம், 12 ஆம் வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

11. **உப்பு : கடல்** எனின் **தங்கம் :** .....

(1) ஆறு (2) வயல் (3) சுரங்கம்

12. **இரும்பு : உலோகம்** எனின் **பால் :** .....

(1) பசு (2) திரவம் (3) கட்டி

13. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A - சரி இன்று வாருங்கள் கோயிலுக்கு போகலாம்.

B - இல்லை பிரத்தியேகவகுப்பு நாளை மறுதினம் தான் உள்ளது.

C - ஆம் இன்றைக்கு பகல் நேர பிரத்தியேக வகுப்பு இல்லையா?

D - அப்பா நான் எனது நண்பனையும் அழைத்து வரவா?

E - அப்பா, இன்றைக்கு கோயிலுக்குப் போவதா?

இவற்றினை ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை

(1) AECBD (2) ECABD (3) ECBAD


www.lkedu.lk

14. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 3 எத்தனை தடவைகள் எழுதப்படவேண்டும்?


(1) 17 (2) 19 (3) 20

• ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் அதேமாதிரித் தெரியும் ஒரு உரு யாது?


15.



(1)




(2)




(3)


16. ஒரு தாள் A முறையே ①, ②, ③ என்னும் புள்ளிக்கோடுகள் வழியே மூன்று தடவைகள் மடிக்கப்படுகிறது. மூன்றாவதாக மடிக்கப்பட்ட விளிம்பின் மத்தியில் உரு Y இல் காட்டப்பட்டவாறு ஒரு முக்கோணப் பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின்னர் தாளை விரித்துப் பார்க்கும்போது காணக்கிடைக்கும் உரு யாது?




A




Y



(1)



(2)



(3)

17. 1 தொடக்கம் 50 வரையுள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களையும், ஒன்றுவிட்ட இரண்டு எண்களையும் கூட்டும்போது

(1) ஓர் ஒற்றை எண்ணும், ஓர் இரட்டை எண்ணும் கிடைக்கும்.

(2) ஓர் இரட்டை எண்ணும், ஓர் ஒற்றை எண்ணும் கிடைக்கும்.

(3) இரண்டும் இரட்டை எண்ணாக இருக்கும்.

18. இலங்கைக்கு மேற்கே போர்த்துக்கல்லும் கிழக்கே சீனாவும் உள்ளன. இலங்கையில் நேரம் நண்பகல் 12.00 ஆக இருக்கும் போது

(1) சீனாவில் பிற்பகலாக இருத்தல்

(2) போர்த்துக்கல்லில் பிற்பகலாக இருத்தல்

(3) சீனா, போர்த்துக்கல் ஆகிய இருநாடுகளிலும் முற்பகலாக இருத்தல்.

19. ஒரு எருமை மாட்டுக் கூட்டத்தில் உள்ள எருமைகளின் கொம்புகளினதும், கால்களினதும் கூட்டுத்தொகை 198 ஆகும். அக்கூட்டத்தில் உள்ள எருமைகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 17 (2) 23 (3) 33

www.lkedu.lk

20. 30 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை புதன்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தில் 27ஆம் திகதி என்ன நாளாகும்?

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

21. கிரிக்கற் விளையாட்டு ஆரம்பிக்கும் போது பந்தை எறிந்து வீரர் ஒருவர் பந்தை பிடிக்கும் விதத்தை எடுத்துக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இங்கு ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




(1) 4,2,3,5,1 (2) 3,1,2,5,4 (3) 1,3,4,2,5

22. x இன் தாய் y யின் மகளெனின் x ஆனவர் y யிற்கு என்ன உறவுமுறை

(1) பேத்தி (2) மகள் (3) பாட்டி

23.



A, B, C, D, E, F என்னும் 5 குழுக்களில் உள்ளவர்களின் எண்ணிக்கைகள் இவ்வுருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளன. குழு E இல் உள்ளவர்களின் எண்ணிக்கை 54 ஆகும். இதற்கு ஏற்ப A, B ஆகிய இரு குழுக்களிலும் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 132 (2) 135 (3) 162


24. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்

- முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் நான்கு மடங்காகும்.
- இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் ஐந்து மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்.

(1) 4411 (2) 4511 (3) 4512

- **மரங்களில் பூக்கும் பூக்கள், கொடிகளில் பூக்கும் பூக்கள், அகத்திப் பூ பூக்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக்குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 25, 26 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**



25. அகத்தி பூவை வகைக் குறிக்கும் எழுத்து யாது?

(1) A (2) B (3) C


www.lkedu.lk

26. B இனால் வகைக் குறிக்கப்படும் பூவின் வகையாகப் பின்வருவனவற்றில் எது இருக்கலாம்?

(1) காக்கணியம்பூ (2) செவ்வரத்தை (3) சூரியகாந்தி

27. ஒரு நீர்ப் பாத்திரத்தின் கொள்ளளவு 15 லீற்றர் ஆகும். புவி என்பவர் ஒரு தடவைக்கு 3 லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரம்புகிறார். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி ஒரு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கிறார். புவி எத்தனை தடவை நீரை இட்ட பின்னர் முதன் முதலாக தொட்டி நிரம்பும்?

(1) 5 (2) 7 (3) 8



28. ஒரு குறித்த பாடசாலையில் குழு விளையாட்டுக்களை விரும்பும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் இவ்வரைபில் தரப்பட்டுள்ளன. காற்பந்து விளையாட விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு விளையாட்டுக்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்.

(1) கரப்பந்தும், எல்லேயும்

(2) எல்லேயும், கிறிக்கெற்றும்

(3) கரப்பந்தும், கிறிக்கெற்றும்


29. ஒரு குறித்த பாடசாலையில் அதிபர் அலுவலகத்திற்கு தெற்கே ஒன்று கூடல் மண்டபம் உள்ளது. அதிபர் அலுவலகத்திற்கு வடக்கே நுழைவாயில் உள்ளது. எனின்,


(1) ஒன்று கூடல் மண்டபத்திற்கு தெற்கே நுழைவாயில் உள்ளது.

(2) நுழைவாயிலுக்கும் அதிபர் அலுவகைத்திற்கும் இடையே ஒன்று கூடல் மண்டபம் உள்ளது.

(3) நுழைவாயிலுக்கு தெற்கே ஒன்றுகூடல் மண்டபம் உள்ளது.

30. இவ்வுருவில் காணப்படும் தராசின் A,B ஆகிய தட்டுகளில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் நிறைகள் ஒன்றுக்கொன்று சமனானவை. இதற்கு ஏற்பப் பின்வரும் தராசின் இரு பக்கங்களினதும் நிறைகளை சமன் செய்வதற்கு தட்டு Bஇல் வைக்கப்பட வேண்டிய பொருள்கள் யாவை?






(1) □ □

(2) □ □ □

(3) ▯ ▯ ▯


www.lkedu.lk

31. உருவில் உள்ள பொருளை ஒரு கனவுருவாகப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய சதுரமுகிகள் தேவை



(1) 14
(2) 36
(3) 42

32. பின்வரும் இருதிண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.



(1) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் அதிகமானது.
(2) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் அதிகமானதாகும்.
(3) உச்சிகளின் எண்ணிக்கையை விட முகங்களின் எண்ணிக்கை அதிகமானதாகும்.

33. ஒரு பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து

- ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு தடவை யாழ்ப்பாணத்திற்கு ஒரு பேருந்து புறப்படுகிறது.
- ஒவ்வொரு 40 நிமிடத்திற்கு ஒரு தடவை மட்டக்களப்பிற்கு ஒரு பேருந்து புறப்படுகிறது.
- முற்பகல் (காலை) 6.30 இற்கு இரு பேருந்துகளும் யாழ்ப்பாணத்திற்கும், மட்டக்களப்பிற்கும் புறப்பட்டு செல்கின்றன.

மறுபடியும் எத்தனை மணிக்கு இரு பேருந்துகளும் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் புறப்பட்டுச் செல்கின்றன.


(1) மு.ப 7.30 (2) மு.ப 8.00 (3) மு.ப 8.30


- பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, T, E, C, H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கிலின்றி) இடப்பட்டு, எழுதப்பட்டுள்ளன.


HEAT = 2143 TEETH = 22441

34. எழுத்து Aயிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
(1) 1 (2) 3 (3) 4

35. தரப்பட்டுள்ள உருக்களில் உள்ள எண் கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.







(1) 216 (2) 344 (3) 435

36. ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுமி ஒருத்தி 30 m தெற்கு நோக்கியும், அவ்விடத்தில் இருந்து 15 m கிழக்கு நோக்கியும் மீண்டும் 20m வடக்கு நோக்கியும் சென்று அவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி 15 m சென்று பயணத்தை முடித்தாள் அச்சிறுமி இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளாள்.

(1) 5m (2) 7m (3) 10m

www.lkedu.lk

37. ஓர் ஆலயத்தில் பூசை செய்யும் குடும்பங்கள் 10 காணப்படுகின்றன. ஒவ்வொருமாதமும் ஒரு தடவை குடும்பங்களின் பெயர்ப்பட்டியலின் ஒழுங்கு முறைப்படி பூசை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. முதலாம் குடும்பத்தின் பூசை ஜனவரி மாதத்தில் இடம் பெற்றது. அக்குடும்பத்தின் அடுத்த பூசை எம்மாதத்தில் இடம் பெறும்?


(1) ஒக்ரோபர் (2) நவம்பர் (3) டிசம்பர்

- சுமதி, கலா ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 70 kg எனவும்.
- கலா, அகிலா ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 74 kg எனவும்
- சுமதி, கலா, அகிலா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 108 kg எனவும் தரப்பட்டிருப்பின்

38. அகிலா, சுமதி ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?


(1) 67 (2) 70 (3) 72

39. A என்ற தனது வீட்டுக்கதவிலிருந்து I என்ற பாடசாலை வரை சென்ற கண்ணனினது பாதை காட்டப்பட்டுள்ளது. வீட்டுக்கதவிலிருந்து பாடசாலையை அடையும் வரை அவன் இடது பக்கமாக திரும்பிய தடவைகளுக்கும், வலது பக்கமாக திரும்பிய தடவைகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?



(1) 0 (2) 1 (3) 2

40. உருவில் இருக்கும் P தொடக்கம் V வரை பெயரிடப்பட்டுள்ள ஏழு குற்றிகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிறத்தில் மை பூசவேண்டி உள்ளது. நிறங்கள் நீலம், ஊதா, சிவப்பு, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், கறுப்பு என்பனவாகும்.



* நீலம் சிவப்புக்கு மேலே இருத்தல் வேண்டும்.
* சிவப்பு ஊதாவிற்கு மேலே இருத்தல் வேண்டும்.
* ஊதா பச்சைக்கு மேலே இருத்தல் வேண்டும். T, U ஆகிய குற்றிகளில் முறையே ஊதா, மஞ்சள் நிற மைபூசப்பட்டிருப்பின் பின்வருவனவற்றில் எது திருத்தமானது.

(1) குற்றி Q இல் அல்லது குற்றி R இல் நீலநிறம் பூசப்பட்டிருக்கலாம்.

(2) குற்றி S இல் அல்லது குற்றி V இல் மஞ்சள்நிறம் பூசப்பட்டிருக்கலாம்.

(3) குற்றி S இல் அல்லது குற்றி V இல் நீலநிறம் பூசப்பட்டிருக்கலாம்.

www.ikedu.lk

www.lkedu.lk

லோயல் மாதிரி வினாத்தாள்கள்

புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

சுட்டெண் : .....

மாதிரி 01

நேரம் : I மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் : அ. சுரேஸ்

N.Dip in Teach, BA, PGDE, MA (Sociology),
Dip in Announcing and Presenting (A Grade), MED.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

வினாத்தாள் II

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

★ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
★ **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
★ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
★ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
★ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
★ செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

1. கீழே தரப்பட்டுள்ள பகுதியை வாசிக்க.

மரமொன்றை நாட்டு வீராயின்
நாடு அழகு பெறும் மண் வளமுறும்
மரங்களின் நிழல் குளிர்மை தரும்
மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்
இனிய பழங்கள் எம்பசி தீர்க்கும்.

மேற்குறித்த பகுதியை பயன்படுத்தி (i) தொடக்கம் (vi) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) இப்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ள மிக முக்கியமான விடயம் யாது?

.....

(ii) மலரும் மலர்கள் மணம் பரப்புவதால் நாம் அடையும் பயன் யாது?

.....

(iii) எழில் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லினைத் தெரிந்து எழுதுக.

.....

(iv) படர்க்கை ஒருமை பெயர்ச் சொல் ஒன்று தருக.

.....

(v) மரமொன்றை என்பதனை பிரித்து எழுதுக.

.....

(vi) "பழங்கள் எம் பசிதீர்க்கும்" என்பதன் கருத்தை உமது சொற்களில் எழுதுக.

.....

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) தமிழ் மொழியில் மொத்தமாக ..... எழுத்துக்கள் உள்ளன.
(216, 217, 247)

(ii) ..... என்பவர் நுண்ணங்கிகளே உணவு பழுதடைதல், நுதித்தல் போன்றவற்றிற்கு காரணம் என கண்டுபிடித்தார்.
(லூயிபாஸ்டர், பிளெஸ்பஸ்கால், ஜோசப் ஸ்டாலின்)

3. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) பாடசாலைகள் வைத்தியசாலைகள் என்பன பொதுச் சொத்துக்களாகும்

(ii) தம்பி எங்கே போகிறாய்

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) .....பார்த்தவன் நகரக்காவலரால் பிடிக்கப்பட்டான்.
(உலவு, உளவு, உழவு)

(ii) "தம்பி பசுவையும் கன்றையும் பிடிப்பதற்காக **அறக்கப்பறக்க** ஓடினான்" இவ்வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து (விரைவாக/நிதானமாக/நிதானமின்றி) என்பதாகும்.

5. சரியான வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) ஆற்றுநீர் சல சலவென பாய்ந்து (ஓடியது/ஓடின).

(ii) ஆட்டுக்கூட்டம் சிதறி (ஓடியது/ ஓடின).

www.lkedu.lk

சுட்டெண் : .....

6. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.
   (i) தம்பி சோத்தை திண்டான். .....
   (ii) அம்மா தோட்டத்திற்கு போனாவு. .....

7. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.
   தலையிடியும் ..... தனக்கு வந்தாற் தெரியும்.


8. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
   செய்தோம்/ நோக்கிப் / நானும்/ பெற்றோரும்/ எனது/ சிகிரியாவை/ பயணம்
   .....

9. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (எண்ணை / எண்ணெய்)

10. சுதந்திர மற்று வாழ்பவன் (அடிமை / அனாதை)

11. பின்வரும் **உவமைச் சொற்றொடரின்** கருத்து யாது?
    எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போல
    .....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
    (i) Water fall : ..... (ii) Hungry : .....

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.
    (i) 
    .....
    (ii) 
    .....

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.
    (i) is / This / Pen / my : .....
    (ii) reading / am / I / a/ book : .....

15. (i) கிரி சுது பாட்ட என்னும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
    .....
    (ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
    விளையாடப்போவோமா? : .....

16. "அறுபத்தைந்தாயிரத்து தொண்ணூற்று ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.
    .....

www.lkedu.lk

17. இவ்வட்டத்தினுள் உள்ள எண்களுள் 8 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது? : .....

804
846 108
904

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 18, 21, 25, 30, ... (ii) 1, 4, 9, 16, 25, ...

19. ஒரு புகையிரத வண்டியில் பயணம் செய்த 364 பேரில் $\frac{4}{7}$ பங்கினர் இறுதிப்புகையிரத நிலையம் வருவதற்கிடையில் இறங்கி இருந்தனர். இறங்காமல் எஞ்சியிருந்த பயணிகள் எத்தனை பேர்.

.....


20. ஒரு வியாபாரி 824 அப்பிள் பழங்களை ஒரு சிறிய பையில் 8 பழங்கள் வீதம் பொதி செய்யவேண்டி இருந்தது.

(i) ஒரு பையில் 8 வீதம் பொதி செய்வதற்குத் தேவையான பைகள் எத்தனை ?

.....

(ii) அதன் பின்னர் எத்தனை அப்பிள்கள் மீதியாக இருக்கும் ? .....

21. ஒவ்வொன்றும் 1 சதுர சென்றிமீற்றர் பரப்பளவைக் கொண்ட 16 சதுரங்களினால் ஆன உரு இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னமாகும் ?



.....

22. ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா பிற்பகல் ஒருமணி பதினைந்து நிமிடத்திற்கு ஆரம்பித்தது. அது 4 மணித்தியாலம் 25 நிமிடத்திற்குப் பின்னர் முடிவடைந்தது.


(i) விளையாட்டு விழா முடிவடைந்த நேரம் யாது?

.....

(ii) விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியால கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

.....

23.



(i) உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக.

.....

(ii) $\frac{3}{6}, \frac{1}{2}, 0.4, \frac{6}{10}$ இவ்வெண்களில் மிகவும் சிறிய எண் யாது?

.....

24. பாத்திரம் ஒன்று கொள்ளும் நீரின் கனவளவு 3 லீற்றர் 750 மில்லிலீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 150 மில்லிலீற்றர் அளவு நீர் இடப்பட்டுள்ளது.


(i) இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் நீரின் அளவு லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு?

லீற்றர் ..... மில்லிலீற்றர் .....

(ii) பாத்திரத்தை நிரப்புவதற்கு தேவையான நீரை ஒவ்வொன்றும் 130 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்?

.....

www.lkedu.lk

25. 

A, B, C எனும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது. B இற்கும் C இற்கும் இடையிலான தூரம் 58 km ஆகும். A இற்கும் C இற்கும் இடையிலான தூரம் 150 km ஆகும். A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

.....

26. குறித்தவொரு கடையில் 2 கிலோகிராம் 500 கிராம் சீனியை வாங்குவதற்கு சுமதி ரூ. 275 பணத்தைச் செலுத்தினாள். அப்பணத்தைச் செலுத்துவதற்கு ரூ. 1000 காசுத்தாளைக் கொடுத்த சுமதிக்கு மீதிப் பணமாக ஒரே வகையான 7 காசுத்தாள்களும் ஒரே வகையான 5 நாணயங்களும் கிடைத்தன.

(i) இக்கடையில் 1 கிலோகிராம் சீனியின் விலை எத்தனை ரூபாய்?

.....


(ii) சுமதிக்கு மீதிப்பணமாகக் கிடைத்த

(அ) ஏழு காசுத்தாள்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு?

.....

(ஆ) 5 நாணயங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு?

.....

27. 

இந்த எண் சட்டத்தில்

(i) வகைக் குறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

.....

(ii) கோல் A இல் உள்ள மணிகளினால் வகைக்குறிக்கப்படும் பெறுமானம் யாது?


.....

28. 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக இடும்போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவைக் காண்க.

.....

29. வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்கள் உண்பதற்கு விரும்பும் உணவு வகைகளைக் காட்டும் பூரணமற்ற வரைபு தரப்பட்டுள்ளது. சோறு உண்பதற்கு விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையானது இடியப்பம் உண்பதற்கு விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும், தோசையை உண்பதற்கு விரும்பும் மாணவர் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசமாகும். வரைபின் உரிய நிரலில் சோறு உண்பதற்கு விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்து அந்நிரலை நிழற்றுக.

.....



- **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கைக்கே உரிய தாவரம்.

(1) வெண்டி
(2) பாக்கிலிப்பாஸ்
(3) அல்லி
(4) தேக்கு

www.lkedu.lk

31. காற்றினாலும் நீரினாலும், பிராணிகளினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது?
(1) மா, கடல் மாங்காய், தேங்காய்
(2) கடல்மாங்காய், எண்ணை, மரமுந்திரிகை
(3) கடல்மாங்காய், மா, மரமுந்திரிகை
(4) எருக்கலை, கடல் மாங்காய், மாம்பழம்

32. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
(1) நீலப்புள்
(2) புள்ளிக்கோட்டி
(3) கருங்குரங்கு
(4) மலைப்பாம்பு

33. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊனுண்ணும் பறவை.
(1) வௌவால்
(2) கழுகு
(3) மாழ்பழக்குருவி
(4) செண்பகம்

34. இரவு நேரங்களில் நடமாடும் பறவை
(1) மழைக்குருவி
(2) செண்பகம்
(3) காகம்
(4) பெரிய ஆந்தை

35. எலியின் உடலில் வாழும் தெள்ளுமூலம் பரவும் நோய் எது?
(1) கழிச்சல்
(2) கொள்ளை நோய்
(3) வாந்திபேதி
(4) தோல் அலட்சி

36. பின்வரும் எவ்விலங்கு பொருளாதார ரீதியில் பயன்தரும் ஓர் உற்பத்திப் பொருளை ஆக்குகின்றது?
(1) தேனீ
(2) வண்ணத்துப்பூச்சி
(3) வெட்டுக்கிளி
(4) குளவி

37. உருளைக்கிழங்கில் அதிக அளவில் அடங்கும் போசனைப் பொருள்
(1) காபோவைதரேற்றுக்கள்
(2) விற்றமின்கள்
(3) கொழுப்புகள்
(4) புரதங்கள்

38. புரதம் அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்?
(1) முருங்கக்காய்
(2) கவ்பி
(3) எலுமிச்சம்சாறு
(4) மரவள்ளி கிழங்கு

39. இலங்கைக்கு கிழக்கே காணப்படும் ஒரு நாடு
(1) மாலைதீவு
(2) சிங்கப்பூர்
(3) இந்தியா
(4) இங்கிலாந்து

40. பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக்கோலம் யாது?
(1) சிறுகரடி
(2) பெருங்கரடி
(3) தென்சிலுவை
(4) விருச்சகம்

41. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது முதலில் செய்யவேண்டியது யாது?
(1) நன்றாக சுவாசத்தைச் சோதித்தல்
(2) நன்றாக குளிப்பாட்டுதல்
(3) வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல்
(4) நன்றாக உறங்கச் செய்தல்

42. வனைசில்லு பயன்படுத்தப்படுவது
(1) கொல்லன் கம்மாலையில்
(2) தச்சன் வேலைத்தளத்தில்
(3) உழவுத் தொழிலில்
(4) மட்பாண்டத் தொழிலில்

www.lkedu.lk

43. டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பின்பற்றக்கூடிய நடவடிக்கை ஒன்று
(1) உடலில் எண்ணெய் பூசுதல்
(2) சுற்றாடலில் புகை ஊட்டல்
(3) சூழவுள்ள சுற்றாடலை சுத்தப்படுத்தல்
(4) பழங்களை கூடுதலாக உட்கொள்ளல்


44. கிளைத் தண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க பழவகை
(1) மாதுளை
(2) கொடித்தோடை
(3) பலா
(4) மா


45. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு அணியில் எத்தனை பேர் இடம் பெறுவர்?
(1) 6
(2) 7
(3) 9
(4) 11


46. வீதி நிறச் சமிக்ஞைக் கம்பத்தில் கீழிருந்து மேலாக நிறச் சமிக்ஞை அமைந்துள்ள சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்க.
(1) சிவப்பு, மஞ்சள், பச்சை
(2) பச்சை, சிவப்பு, மஞ்சள்
(3) பச்சை, மஞ்சள், சிவப்பு
(4) மஞ்சள், பச்சை, சிவப்பு


47. 'பண்டைய அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப் பாசனக் கைத்தொழில் மூலம் எமது நாட்டில் பிரதானமாக செய்யப்படும் ஓர் உற்பத்தி
(1) நெல்
(2) கோப்பி
(3) தேயிலை
(4) கொக்கோ

48. மூன்று உலர் மின் கலங்களைப் பயன்படுத்தி மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செய்வதற்கு மாணவர் ஒருவர் முயற்சி செய்த நான்கு சந்தர்ப்பங்கள் கீழே வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ளன. மிகப் பிரகாசமாக மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பத்தை எடுத்துக்காட்டும் வரிப்படம் எவை?

(1)

A

(2)

B

(3)

C

(4)

D

49. சந்திரன் படிப்படியாகக் கருமையடைகின்ற போது,
(1) சந்திரகிரகணம் ஏற்படாதிருத்தல்
(2) சந்திர கிரகணத்தின் பின்னர் சந்திரன் கருமை அடைதல்
(3) பூரண சந்திரன் வானில் தென்படும் போது
(4) சந்திரகிரகணம் ஆரம்பமாதல்

50. படத்தில் காட்டியுள்ள வீதிச்சைகையினால் கூறப்படும் சைகை யாது?

(1) முன்னால் சிறுவர் கடவை
(2) முன்னால் பாதசாரிகள் கடவை
(3) சிறுவர் கடவை
(4) பாதசாரிகள் கடவை

51. இலங்கையின் அரச இலச்சினையில் 'தன்னிறைவைக்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு யாது ?
(1) தர்மச்சக்கரம்
(2) நெற்கதிர்
(3) நிறைகுடம்
(4) சந்திரன்

52. 'கிறுக்கல் கவிதைகள், ஈரச்சுவதை முறையில் சுவரோவியங்கள் ஆகியன காணப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற இடம்
(1) இசுறுமுனி
(2) யாப்பகூவா
(3) சீகிரியா
(4) எம்பக்க

53. பருகும் நீரினால் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நாம் பின்பற்றத்தக்க சரியான நடவடிக்கை யாது?
(1) கிணற்றில் இருந்து கிடைக்கும் நீரினைப் பருகுதல்
(2) பானையில் வைத்த நீரினைப் பருகுதல்
(3) பருகும் நீரைச் சுத்திகரித்துப் பருகுதல்
(4) குளிர்சாதனப் பெட்டியில் வைத்த நீரைப் பருகுதல்

54. மகாவலி கங்கை உற்பத்தியாகும் இடமும், கடலிற் சேரும் இடமும் முறையே,
(1) ஹற்றன் மேட்டுநிலம், கொட்டியாரக்குடாகடல்
(2) ஹற்றன் மேட்டுநிலம், காலிக் கடல்
(3) சிவனொளிபாதமலை, கொட்டியாரக்குடா கடல்
(4) கற்றன் மேட்டுநிலம், மாத்தறைக்கடல்

55. நீர் வடிகட்டியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரண தொகுதியை தெரிவு செய்க.
(1) பெரிய பிளாத்திக் போத்தல், பஞ்சுத்திரள், பரல்படை, மணற்படை
(2) பெரிய பிளாத்திக் போத்தல், பரல்படை, சில செங்கற் துண்டுகள், மணற்படை
(3) பெரிய பிளாத்திக் போத்தல், பஞ்சுத்திரள், சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்
(4) பெரிய பிளாத்திக் போத்தல், பரல்படை, சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்

56. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்கும் இடையே குறைந்த காலத்தைக் கொண்டது எது?
(1) பால்மா (2) ரின்மீன் (3) யோகட் (4) ரின்பால்

57. வெளிநாட்டில் வசிக்கும் உமது சகோதரன் கதிர்காமப் பெரஹராப் படம் ஒன்றை இயன்றவரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
(1) கடுகதித்தபால் (2) விமானத்தபால் (3) கடற்தபால் (4) மின்னஞ்சல்

58. இலங்கையின் தேசிய மரமாக நீலோற்பலத்தினை தெரிவு செய்தமைக்கான பிரதான காரணம் யாது?
(1) எமது நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றமை.
(2) இந்நாட்டுக்கே உரித்தானதாக இருக்கின்றமை.
(3) எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படக்கூடியதாக உள்ளமை.
(4) மிக்க பயனுடையதாக இருக்கின்றமை.

59. படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையால் குறிக்கப்படுவது
(1) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
(2) ஸ்ரீலங்கா விமான சேவை
(3) பறவைகள் சரணாலயம்
(4) இலங்கை அஞ்சல் சேவை



60. ஒரு நாட்டின் இயற்கைச் சூழலும் மனிதர்களின் நற்செயல்களும் அந்நாட்டுக்குச் சிறப்பை தருகின்றன. இயற்கைச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமாக டெங்கு நோய் பரவுவதை தடுக்க முடியும்.

"டெங்குக் காய்ச்சல்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

(1) .....
(2) .....
(3) .....

லோயல் மாதிரி வினாத்தாள்கள்

புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

சுட்டெண் : .....

மாதிரி 02

நேரம் : 45 நிமிடம்

ஆசிரியர் : அ. சுமேஸ்

N.Dip in Teach, BA, PGDE, MA (Sociology),
Dip in Announcing and Presenting (A Grade), MED.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

வினாத்தாள் I

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

★ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

★ **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

★ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.

★ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

★ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk


இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

- **மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.**


1.



(1)



(2)



(3)

2.



(1)




(2)




(3)

- **3 ஆம், 4 ஆம் வினாக்களில் ஓர் உரு ஏனைய உருக்களில் இருந்து வேறுபடுகிறது. அவ்வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.**


3.



(1)



(2)




(3)

4.



(1)



(2)



(3)

- **வெற்றிடத்துக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

5. புத்தகம் : அச்சகம் எனின் துணி .....

(1) தொழிற்சாலை (2) அலுவலகம் (3) தையல் ஊசி

6. மீனவர் : மீன் எனின் விவசாயி .....

(1) வயல் (2) நெல் (3) மண்வெட்டி

www.lkedu.lk

- **7 ஆம், 8 ஆம் வினாக்களில் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

7. 3, 53, 753, ...?
   (1) 973 (2) 9753 (3) 9973

8. $\in \beta \Omega \in \beta$ .....$\in$.....Ω
   (1) $\Omega\ \beta$ (2) $\beta\ \Omega$ (3) $\Omega \in$

- **பின்வரும் கவிதையை வாசித்து 9, 10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

மரங்கொடியினைத் தழுவி வரும் தென்றல் காற்று சுகம் தரும்.
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் - இந்த
உண்மையை உணர்ந்து மரங்கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்வதே உன்னத செயலாம்.

9. எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது.
   (1) மரங்கொடி
   (2) தென்றல் காற்று
   (3) உன்னத செயலை செய்தல்

10. இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது
   (1) உடல் உளத்திற்கு புத்துணர்வு தரும் தென்றல் காற்று பற்றி
   (2) மரங்கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி
   (3) சூழலில் மரங்கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி

11. திறமையானவன் எதனைப்பயன்படுத்தியும் சாதிப்பான் என்னும் கருத்தை உணர்த்துவதற்கு பொருத்தமான பழமொழி யாது
   (1) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
   (2) சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்
   (3) கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு

12. எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?
   (1) தேயான போது உதவுதல்.
   (2) பிரச்சினையை தீர்ப்பதற்குத் தலையிடுதல்.
   (3) பிரச்சினையை கூட்டுவதற்குச் செயற்படுதல்.

- ரூ. 673.28 ஐக் குறியீடுகளில் R. BEC. AF எனக் காட்டலாம் எனின்,

13. ரூ. 2873. 36 ஐ எவ்வாறு காட்டலாம்?
   (1) R. HFAC. CF (2) R. AFEC. CB (3) R. AFEC. AF

www.lkedu.lk

14. R. ABCE. DF இதனால் காட்டப்படுவது யாது?

(1) ரூ. 2638.27 (2) ரூ. 2637.58 (3) ரூ. 26 37.68

15. சுமதியின் தங்கை ரதி ஆவாள். ரதிக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். சுமதிக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் யாவை?


(1) சகோதர்கள் 3, சகோதரிகள் 2
(2) சகோதர்கள் 2, சகோதரிகள் 3
(3) சகோதர்கள் 3, சகோதரிகள் 3

16. 

என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி வீரமுரசு என்னும் சொல் எழுதப்பட்டிருந்தது.

அதற்கு ஏற்ப  என்னும் குறியீட்டினால் காட்டப்படும் சொல் யாது?

(1) முரசு (2) அரசு (3) சரசு



17. ஒரு குறித்த பாடசாலையில் மெய்வல்லுனர் விளையாட்டுக்களை விரும்பும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் மேலே உள்ள வரைபில் தரப்பட்டுள்ளன. நீளம் பாய்தல் போட்டியை விளையாட விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு விளையாட்டுக்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்கு சமம்

(1) ஈட்டி எறிதல், தட்டெறிதல்
(2) உயரம் பாய்தல், ஈட்டி எறிதல்
(3) உயரம் பாய்தல், தட்டெறிதல்

18. முந்தநாளைக்கு முதல் நாள் வியாழக் கிழமை. கமலின் பிறந்ததினம் நாளை அன்றைக்கு அடுத்த தினம் வருகிறது. கமலின் பிறந்த தினம் வரும் நாள் யாது?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்


19. பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.

K → ⊻ எனின் B → .....

L → ⅃ எனின் J → .....

(1) ⊟ உம் ⌊ உம் (2) ⊟ உம் J உம் (3) ⊟ உம் ⊢ உம்

• **கீழே காட்டப்பட்டுள்ள உருவை அவதானித்து 20, 21 ஆம் வினாக்களுக்கு விடை அளிக்க.**



20. இவ்வுருவில் எத்தனை சிறிய குற்றிகள் காணப்படுகின்றன?


(1) 32. (2) 48 (3) 64

21. இவ்வுருவில் ஒரு பக்கமும் தெரியாத சிறிய குற்றிகள் எத்தனை உள்ளன?

(1) 4 (2) 6 (3) 8

22. தாயின் வயது அவரின் மகளின் வயதிலும் நான்கு மடங்காகும். அவரது மகனின் வயது அவருடைய மகளின் வயதின் அரைவாசியை விட இரண்டு ஆண்டுகள் அதிகமாகும். மகனின் வயது 12 ஆண்டுகள் எனின் தாயின் வயது யாது?


(1) 48 வயது (2) 60 வயது (3) 80 வயது



23. மேலே உள்ள உருவில் முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 14 (3) 16

24. காலை 7.15 இற்குக் கொழும்பில் இருந்து மட்டக்களப்பை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் செலுத்தப்படும் ஒரு பேருந்தின் பயணம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.



அடைந்த நகரம்	நகரத்தில் உள்ள கிலோமீற்றர் தூண்	அடைந்த நேரம்
குருணாகல்	94 *km*	காலை 10.15
மட்டக்களப்பு	235 *km*	.....

இதற்கேற்ப பேருந்து கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நகரத்தைப் பிற்பகல் எத்தனை மணிக்கு அடையும்

(1) பி. ப. 12. 45 (2) பி. ப. 4. 15 (3) பி. ப. 5. 45


25. நான் ஆறுதல் பரிசினைப் பெறுவதற்காக நிரையில் நின்றேன். எனக்கு முன்னால் 8 மாணவர்களும் எனக்குப் பின்னால் 6 மாணவர்களும் நின்றனர். ரகு என்னும் எனது நண்பர் நிரையின் நடுவில் நின்றால், ரகு நிரையில் எத்தனையாவது ஆளாக நின்றார்?

(1) 8$^{ம்}$ ஆள் (2) 9$^{ம்}$ ஆள் (3) 11$^{ம்}$ ஆள்

www.lkedu.lk


• எண் கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.

26.



(1) 10 (2) 11 (3) 12


27. உருவில் நான்கு ஈர்க்குத் துண்டுகள் உள்ளன.



அந்த நான்கு ஈர்க்குத் துண்டுகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?



(1)



(2)



(3)

28. ஒரு மேசையை வாங்குவதற்கு ரூ. 9300 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 5250 இருந்தது. மீதியை இரு சகோதரர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்

(1) ரூ. 2050 உம் ரூ 2100 உம்

(2) ரூ. 2000 உம் ரூ. 1950 உம்

(3) ரூ. 2050 உம் ரூ. 2000 உம்


29. முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

ஒரு சிறுவன் தாயாருடன் ஒரு காட்டின் நடுவே செல்லும்போது ஒரு பயங்கரமான யானை முன்னால் வருவதைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடினான். அவனது தாய் பயந்து ஓடுவதற்கு.....

இல்லாமையால் விநாயகர் துதியினைப் .....


(1) பழக்கம், பாடினார் (2) விருப்பம், பாடினார் (3) நாட்டம், பாடினார்

30. சதுர வடிவக்கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறு முக்கோணப் பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ள விதத்தை உரு A காட்டுகிறது. கடதாசி விரிக்கப்படும் போது பெறும் வடிவத்தைக் காட்டும் படத்தினை தரப்பட்டுள்ள ஏனைய நான்கு உருக்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.




உரு A


(1)



(2)



(3)




www.lkedu.lk

31. ஒரு பிள்ளை அதன் வயது 16, 18 ஆக இருக்கும் போது பிரபலமான இரு பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டும். சுமதி வசந்தியிலும் பார்க்க ஏழுவயதினால் மூத்தவள். சுமதிக்கு 16 வயதாக இருக்கும் போது 2020 ஆம் ஆண்டில் முதலாவது பரீட்சைக்கு தோற்று வாராயின் வசந்தி இரண்டாவது பரீட்சைக்கு தோற்ற வேண்டிய ஆண்டு எது?

(1) 2029 (2) 2032 (3) 2034

32. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகிறது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர்முகங்களிடையே இருக்கும் எண்களிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம். அத்தொடர்புக்கேற்ப வெற்றிடத்திற்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.



(1) 22 (2) 24 (3) 26

33. $\square \times \bigcirc = 65$ ஆகவும் $\square - \bigcirc = 8$ ஆகவும் இருப்பின் $\square + \bigcirc =$ இன் பெறுமானம் யாது?


(1) 12 (2) 13 (3) 18

34. இரு வெற்று கூடுகளுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

$468 \square 9 = 13 \square 4$

(1) -, × (2) ÷, × (3) ×, ÷

- ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகிறது.



35. மேற்குறித்த பாதை நெய்யரியில் ராஜினி S இலிருந்து U ஊடாக Pயிற்கும், மோகன் Pயிலிருந்து R ஊடாக S இற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப

(1) மோகன் ராஜனிலும் பார்க்க கூடுதலான தூரத்திற்கு பயணம் செய்துள்ளான்.

(2) ராஜினி மோகனிலும் பார்க்க கூடுதலான தூரம் பயணம் செய்துள்ளான்.


(3) இருவரும் பயணம் செய்துள்ள மொத்தத் தூரம் 260 மீற்றர் ஆகும்.


36. மேற்குறித்த பாதை நெய்யரியில் Sலிருந்த Rனூடாக Qவரையுள்ள குறுகிய தூரம்.


(1) 60 *m* (2) 90 *m* (3) 100 *m*


www.ikedu.lk

37. பின்வரும் உருவில் அட்டைத்தாளில் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும் போது தோன்றும் விதம் யாது?




(1)


(2)


(3)


38. P, Qஎன்னும் இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 12 கிலோ மீற்றர் ஆகும். ஒரு குறித்தநாளில் நண்பகல் 12 மணிக்கு சங்கர் Pயிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு $2\,km$ என்னும் வீதத்தில் Qவை நோக்கிச் செல்கின்றான். சாந்தன் அதே நேரத்தில் Qவிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு $1km$ என்னும் வீதத்தில் Pயை நோக்கிச் செல்கின்றான்.



சங்கரும் சாந்தனும் சந்திக்கும் போது நேரம் யாது?

(1) பிற்பகல் 3.00 (2) பிற்பகல் 4.00 (3) பிற்பகல் 5.00


- கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்டத்திட்டமிடப்பட்டிருந்தது.

படிமுறை	எடுக்கும் காலம்
1	$1\frac{1}{2}$ ஆண்டுகள்
2	படிமுறை 1 இன் இரண்டு மடங்கு
3	படிமுறை 1 இன் $\frac{1}{3}$ மடங்கு

39. 2010 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்பட்டிருக்கும்?

(1) 2015 (2) 2016 (3) 2017

40. இப்படத்தில் Aயும் Bயும் எவ்வாறு வேறுபடமுடியும்.



(1) A கீழ் நோக்கிச் செல்லும் அதே வேளை B மேல் நோக்கிச் செல்லும்

(2) A உம் B உம் மேல் நோக்கிச் செல்லும்

(3) A மேல் நோக்கிச் செல்லும் அதே வேளை B கீழ் நோக்கிச் செல்லும்

www.ikedu.lk

www.lkedu.lk

லோயல் மாதிரி வினாத்தாள்கள்

புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

www.lkedu.lk

சுட்டெண் : ..... | **மாதிரி 02** | நேரம் : I மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் : அ. சுரேஸ்

N.Dip in Teach, BA, PGDE, MA (Sociology),
Dip in Announcing and Presenting (A Grade), MED.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

வினாத்தாள் II

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

★ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
★ **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
★ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
★ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
★ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
★ செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க

இங்கிலாந்து நாட்டின் 'கென்ட்' என்ற மாகாணத்தில் உள்ள 'வீல்டு' எனும் கிராமத்தில் கிராமவாசிகள் முதன்முதலில் இந்தக் கிரிக்கெட் விளையாட்டை ஆர்வமாக விளையாட ஆரம்பித்தார்கள். மெல்ல மெல்ல அந்த விளையாட்டு இங்கிலாந்தில் உள்ள மற்ற மாகாணங்களிலும் தொற்றிக் கொண்டது. லண்டன் நகரத்து செல்வசீமான்கள் இந்த விளையாட்டைப் பார்த்து அதன் சுவாரசியத்திலும் விறுவிறுப்பிலும் தங்களை மறந்து உற்சாகமடைந்தனர். அவர்கள் அந்த விளையாட்டில் ஈடுபாடு கொள்ள கிரிக்கெட் விதி முறைகள் நாளடைவில் மெருகேறிச் செழுமையடைந்தன.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) கிரிக்கெட் விளையாட்டைக் கண்டு யார் உற்சாகமடைந்தனர்.

.....

(ii) கிரிக்கெட் விளையாட்டை முதன்முதலாக விளையாட ஆரம்பித்தவர்கள் யார்?

.....

(iii) பந்தியில் இடம் பெற்றுள்ள அடுக்குத் தொடர் ஒன்றை எழுதுக.

.....

(iv) 'உற்சாகமடைந்தனர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.

.....

(v) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) கிறிக்கெட் விளையாட்டு

(2) கிறிக்கெட் வரலாற்று குறிப்புகள்

(3) ஏனைய விளையாட்டுக்களை விட கிறிக்கெட் விளையாட்டு சிறந்தது.

2. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) இட்டுக்கட்டுதல் : .....

(ii) கைகூடுதல் : .....

3. பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

(i) மரக்கறித் தோட்டத்தில் வெண்டி கத்தரி தக்காளி முதலிய காய்கறிகள் காணப்படுகின்றன

(ii) தம்பி எங்கே போகிறாய்

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல தேர், யானை செலுத்துபவன் .....

5. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.

..... எங்கும் இல்லை

6. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

நடக்க இருப்பவற்றை முன்னர் கூறுபவன் .....

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

(i) நாம் எமது விடயத்தில் **கண்ணாயிருத்தல்** வேண்டும். கண்ணாயிருத்தல் என்பதன் அர்த்தம் ..... ஆகும்.

(விழிப்பாயிருத்தல், அறிவாய் இருத்தல், மகிழ்ச்சியாய் இருத்தல்)

www.lkedu.lk

(ii) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா .....
(அமுதவிழா, பவளவிழா, மணிவிழா)

(iii) அவன் வேகமாக ஓடினான். இங்கு அவன் என்பது ..... சொல் ஆகும்.
(படர்க்கை ஒருமை, தன்மை ஒருமை)

8. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
இரு/ அந்த/ நிழல்/ பக்கங்களிலும்/ வீதியில்/ மரங்கள்/ நின்றன .....

9. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (வென்னீர், வெந்நீர்)

10. தேர்தல் ஒன்றில் போட்டி இடுபவன் (வேட்பாளன்/ பிரதிவாதி)

11. பின்வரும் இணைமொழியை பூர்த்தி செய்க.


ஏற்ற .....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Black board ..... (ii) Birds .....

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) am/ going/ I/ home/ to

.....

(ii) am / watering / I/ plants/ the

.....


15. (i) 'பத்' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

.....

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

மகே கம யாப்பனய .....

www.lkedu.lk

16. 

வட்டத்தில் உள்ள நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.....

17. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

2340, 4894, 2329, 3041 : .....

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 6, 10, 15, 21, ...

(ii) 3, 9, 27, ..., 243

19. ஒரு கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 708 சவர்க்காரக் கட்டிகளில் $\frac{5}{6}$ விற்கப்பட்டன. விற்கப்படாமல் எஞ்சி இருக்கும் சவர்க்காரக் கட்டிகள் எத்தனை?

20. 702 அடிமட்டங்களை ஒரு பைக்கற்றுக்கு 7 வீதம் பைக்கற்றுக்களில் பொதி செய்யவேண்டி உள்ளது.

(i) ஒரு பைக்கற்றில் 7 வீதம் பொதி செய்வதற்குத் தேவையான பைக்கற்றுக்கள் எத்தனை?

(ii) அதன்பின்னர் எத்தனை அடிமட்டங்கள் மீதியாக இருக்கும்?

21. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடை அளிக்குக.

கோட்டம்	A	B	C	D
மாணவர் தொகை	2310	2460	1760	1914

(i) A கோட்டம், C கோட்டம் ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

.....

(ii) D கோட்டத்தை விட, B கோட்டத்தில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்?


.....

22. பி. ப 9.15 இற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்துவண்டி மறுநாள் மு. ப 5.18 இற்கு மட்டக்களப்பை அடைந்தது. பயணத்துக்குச் செலவாகிய மொத்த நேரம் எவ்வளவு?

..... மணி .....நிமிடங்கள்

23. ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரிலிருந்து 7 லீற்றர் 350 மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 11 லீற்றர் 575 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த தண்ணீரின் கனவளவு யாது?

.....

24. 


(i) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

.....

(ii) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.


.....

www.lkedu.lk

25. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பத்தின் பங்குகளாக எழுதுக.

.....


26. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


.....


27. கடிகாரம் Aயின் முகத்தில் காணப்படும் நேரத்துடன் 4 மணித்தியாலம் 25 நிமிடத்தை கூட்டும்போது வரும் நேரத்தை Bயின் முகத்தில் மணித்தியால முள்ளையும் நிமிடமுள்ளையும் வரைக.

A



B




28. 

உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு $11m$ ஆகும். பக்கம் ABயின் நீளம் $2m\ 80cm$ உம் பக்கம் BC யின் நீளம் $3m\ 70cm$ உம் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது?

.....

29. ஒரு பிறந்த தின வாழ்த்து இதழின் நீளத்தையும் அகலத்தையும் அளவு நாடாவினால் அளந்த போது பெற்ற அளவுகள் அம்புக்குறியினால் கீழே தரப்பட்டுள்ளன.



- 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

30. ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) வெசாக் ஓக்கிட்டு, காட்டிலுப்பை, தொரணை
(2) மா, நிலவேம்பு, பலா
(3) நெல்லி, மா, றம்புட்டான்
(4) ஈரப்பலா, மா, மாதுளை

31. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை

(1) தென்னை, எருக்கலை, கத்தாப்பு
(2) தணக்கு, எருக்கலை, வேங்கை
(3) இறப்பர், கோப்பி, துந்திரி
(4) கோப்பி, கொக்கோ, வேங்கை

32. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு யாது?

(1) குளவி
(2) பாம்பு
(3) கறையான்
(4) தேள்

33. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி.

(1) தேனீ (2) வண்ணத்துப்பூச்சி

(3) மயிர்க்கொட்டி (4) சிட்டுக்குருவி

34. பின்வருவனவற்றுள் இலங்கை நாட்டிற்கே உரித்தான விலங்கு அல்லாதது?

(1) செம்முகப் பூங்குயில் (2) காகம் (3) மரத்தேரை (4) சுண்டெலி

35. ஈக்களால் பரவக்கூடியது

(1) அம்மை நோய் (2) கழிச்சல் நோய்

(3) விசர்நாய்க்கடி (4) மலேரியா நோய்

36. நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்?


(1) மண்ணெண்ணெய் (2) நல்லெண்ணெய்

(3) காவட்டம் புல்லெண்ணெய் (4) தேங்காய் எண்ணெய்

37. கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள உணவு அல்லாதது

(1) கவ்பி (2) நிலக்கடலை (3) முட்டை (4) இறைச்சி

38. A, B ஆகிய சிறிய கண்ணாடிக் குவளைகள் இரண்டிலும் ஆரோக்கியமான பாசிப்பயறு வித்துக்கள் சம அளவில் இடப்பட்டுள்ளன. குவளை Aயில் வித்துகள் நன்கு மூடப்படும் வரை நீர் இடப்பட்டுள்ளது. குவளை Bயில் ஈரமான பஞ்சின் மீது வித்துகள் இடப்பட்டுள்ளன. அவ்விரு குவளைகளையும் சூரிய ஒளியுள்ள இடத்தில் வைத்து சில நாட்களின் பின் சோதித்துப் பார்கும் போது கிடைக்கும் அவதானிப்பு எதுவாக இருக்கும்.



(1) குவளை Aயில் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்.

(2) குவளை Bயில் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்.

(3) A, B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்.

(4) A, B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துகள் முளைத்திருக்காது.

39. பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக்கோலம் யாது?

(1) வேட்டைக்காரன் (2) பெருங்கரடி (3) தென்சிலுவை (4) விருச்சிகம்

40. உயரத்தில் இருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யவேண்டிய முதலுதவி

(1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியினால் கட்டுதல்.

(2) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தை தூய நீரினால் கழுவுதல்.

(3) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்

(4) குளிர் நீரைக் குடிக்க கொடுத்தல்

41. மண்ணரிப்பைத் தடுப்பதற்குத் தேயிலை பெருந்தோட்டங்களில் கையாளப்படும் உபாயம் அல்லாதது

(1) படிக்கட்டு கட்டுதல் (2) புற்களை செதுக்குதல் (3) மரம் நடுதல் (4) கான் வெட்டுதல்

www.ikeon.lk

42. மடி எனப்படுவது
(1) கரைவலையின் அடிப்பாகத்தில் மீன்கள் சேருமிடம்.
(2) மீன் பிடிப்பதற்கு பயன்படுவது
(3) கரை வலையை குறிப்பிடுகிறது
(4) மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவோர் பாவிப்பர்.




43. நுளம்புகளை அழிப்பதற்குப் பொருத்தமான ஒரு முறை அல்லாதது
(1) நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்தல்
(2) சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருத்தல்
(3) நீர்த்தடாகங்களில் நீர்த் தாவரங்களை வளர்த்தல்
(4) வேம்பு இலைகளை எரித்துப் புகை ஊட்டுதல்

44. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு எது?
(1) மண்புழு (2) கறையான் (3) நத்தை (4) செவ்வெறும்பு

45. கிறிக்கெட் விளையாட்டில் ஒரு அணியில் எத்தனை பேர் இடம் பெறுவர்
(1) 6 (2) 9 (3) 11 (4) 16

46. பின்வருவனவற்றுள் தண்டின் மூலம் முளைக்கும் தாவரம் அல்லாதது
(1) ஈரப்பலா (2) கங்கூன் (3) கரும்பு (4) பொன்னாங்கன்னி

47. நீர்ப்பாசனத்திற்கான நீரைச் செலுத்தும் வழி எது?
(1) குளக்கட்டு (2) கால்வாய் (3) கலிங்கல் தொட்டி (4) அலைதாங்கி

48. பின்வரும் மின் இணைப்புக்களில் ஒளிராத மின்னிணைப்பைத் தெரிவு செய்க.
(1) 
(2) 
(3) 
(4) 

49. பொலீசார் சில சோதனை நடவடிக்கைகளின் போது பயிற்றப்பட்ட நாய்களைப் பயன்படுத்துவர். அதன்போது பிரதானமாக நாயின் எந்த இயல்பு பயன்படுத்தப்படும்?
(1) கூர்மையான கண் பார்வை
(2) தெளிவாகக் காது கேட்டல்
(3) சிறந்த மோப்பசக்தி
(4) வேகமான ஓட்டம்

50. உருவில் மஞ்சள் நிறப் பின்னணியில் கருமை நிறத்தில் உள்ள வீதிக்குறி குறிப்பிடுவது.

(1) படலை உள்ள புகையிரதப் பாதை
(2) படலை இல்லாத புகையிரதப் பாதை
(3) பாதுகாக்கப்பட்ட புகையிரதக் கடவை முன்னால்
(4) பாதுகாக்கப்படாத புகையிரதக் கடவை முன்னால்

www.lkedu.lk

51. இலங்கையின் அரச இலச்சினையில் தூய்மையைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு யாது?
(1) தர்மச்சக்கரம் (2) நிறைகலசம் (3) நெற்கதிர் (4) மலர் இதழ்

52. கொத்தன் தொழிலில் தூக்குக்குண்டு எதற்காகப் பயன்படுகிறது.
(1) துவாரம் அடைத்து சீமெந்து பூச
(2) சுவரின் நேர்மைத் தன்மையை பார்த்து கட்டுவதற்கு
(3) சுவரின் கிடைத்தன்மையை பார்த்து கட்டுவதற்கு
(4) சுவரை பார்த்து கட்டுவதற்கு

53. மரச் செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்
(1) சீகிரியா (2) யாப்பகூவா (3) இசுறுமுனி (4) எம்பக்க

54. மகாவலி கங்கை உற்பத்தியாகும் இடம்
(1) ஹற்றன் மேட்டுநிலம் (2) திருகோணமலை (3) நுவரெலியா (4) கண்டி

55. பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்தி அதிகஅளவில் விரயமாகும் விளையாட்டு
(1) கரம் அடித்தல் (2) எல்லே (3) கிட்டிப்புல் (4) உதைப்பந்தாட்டம்

56. பாடசாலைக்கு முக்கிய பிரமுகர்களை அழைத்து வரும் போது எந்நிலையில் நிற்க வேண்டும்?
(1) இலகுவாக நிற்றல் (2) கவனமாக நிற்றல்
(3) உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல் (4) கண்களை திறந்து வைத்திருத்தல்

57. இலங்கை முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் அடங்கிய விடை எது?
(1) கடல் காணப்படுதல், அறிவாளிகள் காணப்படுதல், காடுகள் காணப்படுதல்
(2) கடல் காணப்படல், இந்தியாவிற்கு அருகில் இருத்தல், பலமாகாணங்கள் காணப்படல்
(3) நதிகள் காணப்படல், உல்லாச விடுதிகள் காணப்படல், மலைகள் காணப்படல்
(4) தீவாக இருத்தல், இயற்கைத் துறைமுகம் காணப்படல், வாசனைத் திரவியம் காணப்புடல்.

58. இயற்கையான காற்றின் சக்தி பயன்படும் ஒரு சந்தர்ப்பம்?
(1) பட்டம் பறக்கவிடல் (2) நாதஸ்வரம் வாசித்தல் (3) பலூன் ஊதுதல் (4) சங்கு ஊதுதல்

59. படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையினால் குறிக்கப்படுவது
(1) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
(2) இலங்கைத் தபால்
(3) இலங்கை ஆகாய விமானம்
(4) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



60. எம்மைச் சூழவுள்ள பிராணிகளால் எமக்கு பல பயன்கள் கிடைக்கின்றன. இயற்கை அன்னை கொடுத்த அரும் பொக்கிசங்களில் பிராணிகளும் முதன்மை பெறுகின்றன.
"பிராணிகளால் நாம் பெறும் பயன்கள்" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

(1) .....

(2) .....

(3) .....

லோயல் மாதிரி வினாத்தாள்கள்

புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

சுட்டெண் : ..... | **மாதிரி 03** | நேரம் : 45 நிமிடம்

ஆசிரியர் : அ. சுரேஸ்

